**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.414/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராகுல் | Caste | : |
| Father 's Name / Husband Name | : முருகன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(03.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சித்தாலையில் குடியிருந்து வருகிறேன். நான் அருணா கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2017ம் வருடம் மாலை 7 மணியளவில் எனக்கும் எதிரிக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அதில் நான் கீழே விழுந்து கழுத்தில் இரத்தக் காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். நான் சம்பவம் தொடர்பாக புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். மேல் நடவடிக்கை எதுவும் வேண்டாம். ஆஜர் எதிரி எனது அண்ணன் ஆவார். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக

செய்து கொடுத்தேன். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது அண்ணன் ஆவார். கடந்த 13.11.2017ம் தேதி 17.00 மணிக்கு எங்கள் ஊரில் உள்ள கடைக்கு சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரியும் விக்னேஷ் என்பவரும் என்னை தகாத வார்த்தைகளால் பேசி கையாலும், கத்தியாலும், தாக்கியதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதாலும் அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டபடியாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.1 புகாரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக் கொண்டதற்கு வெள்ளை பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.414/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : நீலமேகம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(03.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சித்தாலையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 8 வருடங்களுக்கு மேல் இருக்கும்,. மாலை 7 மணியளவில் சண்டைபோட்டுக் கொண்டு வந்தார்கள். எனது மகனுக்கு காயம் இருந்தது. அதற்காக சிகிச்சைக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டோம். ஆஜர் எதிரி எனது உறவினர் தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். கடந்த 13.11.2017ம் தேதி 17.00 மணிக்கு எங்கள் ஊரில் உள்ள கடைக்கு அ.சா.1 சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரியும் விக்னேஷ் என்பவரும் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் பேசி கையாலும், கத்தியாலும், தாக்கியதில் அ.சா.1க்கு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும்

எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் சம்பவம் தொடர்பாக அ.சா.1 தாலுகா போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதாலும் அவர்களுடன் சமாதானமாக சென்று விட்டபடியாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**இல்லை.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.414/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சத்யா (எ) சந்தியா** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **முருகன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(03.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சித்தாலையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இளமாறனும், ராகுலும் சண்டை போட்டுக் கொண்டிருப்பதாக சொன்னார்கள். தற்போது நாங்கள் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். கடந்த 13.11.2017ம் தேதி 17.00 மணிக்கு எங்கள் ஊரில் உள்ள கடைக்கு அ.சா.1 சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரியும் விக்னேஷ் என்பவரும் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் பேசி கையாலும், கத்தியாலும், தாக்கியதில் அ.சா.1க்கு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் சம்பவம் தொடர்பாக அ.சா.1 தாலுகா போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள்

என்பதாலும் அவர்களுடன் சமாதானமாக சென்று விட்டபடியாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**இல்லை.

**மறுவிசாரணை**. இல்லை